# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி


KONDESHARA PUBLIC LIBRARY 23-2-1968

உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றும்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினுறும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம்ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவுயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்தும்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.

கனவு 11 கற்பனை 2] திருச்சி 15—2—68 [ தனிப் பிரதி 25 காசு

# வண்ணங்கள்

*[ரெட்டியார்]*

★

ஞானக்கடல் மீதெழுந்த ஞாயிறென்ன
நற்றமிழ்த் தாய்பெற்றெடுத்த — தவத்தின்பேறே
ஆனந்தக்கனவு பலகாட்டி ஊக்கி
அடிமை விலங்கறுத்து எம்மைத்துயிலெழுப்ப
தேனொத்த செந்தமிழில் தீங்கவிதை யாத்த
செழுஞ்சோதிச் சுடர்மணியே! கவிஞர்தேவே
தானே வந்தெனையாண்டு அடிமைகொண்ட
சற்குருவே! பாரதிநின் தாளே காப்பு.

விரிகதிர்வீசி செங்கதி ரெழுந்தான்
வியனிலம் இருள்கெட வெளுந்த துவானம்
அரியெனும் பச்சை எங்கணும் அசைய
ஆவாரை பூக்களில் மஞ்சளே கொஞ்ச
ஒருதனிவான் நீலவண்ணத்தில் துஞ்ச
ஊதா கலவை யும்செடிகளில் விஞ்ச
பெருமிதத்தால் கவிதமிழிசைப் பாட
பூதலத்தாயே எழுந்தருள் செய்வாய்.

விடிந்தது பொழுது மடிந்தது இருளும்
விண்வெளி எங்கணும் செங்கதிர் பரப்பி
கடிதினில் ஆதவன் சுழன்றிட மாலின்
கையது ஆழிக் கழன்ற தோஎன்ன
நொடிக்கொரு வண்ணக் கலவைகள் மாறி
நூறு நூறுயிரக் காட்சிகள் விஞ்ச
வடித்திடும் இன்பம் பிடித்திட சற்றே
வண்ணத்தம்மா பள்ளி எழுந்தருளாயே!

வேறு

செஞ்சோதி சக்தியவள் வடிவாய்த் தோன்றும்
செழும் பச்சை திருமாலாய் என்முன்தோன்றும்
விஞ்சுகின்ற வெண்மையது சிவமாய்த்தோன்றும்
மேவுகின்ற ஊதாவில் வேல்காதல் தோன்றும்
வஞ்சகர்கள் உள்ளமெலாம் கறுப்பாய்தோன்றும்
வளர்காவி தியாகத்தின் வடிவாய்த்தோன்றும்
அஞ்சுகின்ற உள்ளமெல்லாம் மஞ்சள்தோன்றும்
அனைத்துமொன் றேஎன நீல வானம்தோன்றும்.

எங்கெங்கும் சக்தி யவள் இணைந்துநின்று
இவ்வுலகு வாழ்வினிலும் ஊக்கம் ஊட்ட
அங்கங்கு அவ்வண்ணம் காட்டி அன்னை
ஆடுகின்ற பெருங்கூத்தை உள்ளம்காணும்
தங்குதடை யின்றி எவ்வுயிரும் வாழ
சக்தியன்னை பலவண்ணக் கலவைகாட்டி
மங்களமாய் புவிவாழ வைத்தாள் அன்னை
மலரடியை போற்றிடுவோம் வாரீர் வாரீர்.

நீலநிற சிற்றுடை கடலுக்காக்கி
நெடுவானில் முத்தானை விரித்துப் போட்டு
பால்நிலா வானத்தில் வீசிப்போட்டு
பச்சை வண்ணதுயில் செடிகொடிக்கும் போத்தி
கோலத்தீ பந்தமென சுடராய்த் தோன்றி
கோணாத மண்பொன்னாய் மாற்றிநின்று
வாலைத்தாய் இவ்வுலக வண்ணங்காட்டி
வளர்க்கின்றாள் வையகத்தீர் வாரீர் வாரீர்.

நிலமாகத் தீயாக நீர்காற்றாய் வானாய்
நிறைந்திங்கு நமை காக்கும் இறவிதானும்
குலம்ஒன்றி வாழ்ந்திடவே வண்ணங்காட்டி
குறிகாட்டி மழைகொட்டி விளைவை யூட்டி
கலகமின்றி வாழ்வதற்கு ஞாலம் காட்டி
கவிதையெனும் தேனதிலே மருந்தைக்கூட்டி
உலகத்துக் கூட்டுகிறாள் பெருநோய் என்று
உணர்ந்திட்டால் சீறிடுவாள் ஊழியாவாள்.

நம்முடைய சிறுமைகளே இவ்வுலகில் தோன்றி
நடக்கின்ற போர், நோய். வெள்ளம், பூஅதிர்ச்சி
தம்மனத்தை அறிந்தவர்கள் சக்திபெற்று
தமிழென்னும் அமுதமதை சுவைக்கவைத்து
இம்மையிலே இயற்கையெனும் அன்னைகாட்டும்
எழில்அறிந்து இனம்கண்டு வாழ்வாரென்னில்
அம்மம்மா அவர்தாமே தேவர் என்றும்
அமரரென விண்மீனாய் ஆவாராவார்.

2-ஆம் பக்கம் பார்க்க

(முதல் பக்கத் தொடர்ச்சி)

புல்லுக்கும் கல்லுக்கும் வாயில்உண்டு
புதுமைக்கும் பழமைக்கும் சிறப்பிங்குண்டு
கல்லுக்குள் தேரையினை பதித்துவைத்தும்
கடலுக்குள் முத்தினையே போட்டு வைத்தும்
எல்லையிலா சக்திதனை மனிதர்க் கீந்தும்
இணையில்லா வான்வில்லை வளைத்துக்காட்டி
அல்லின்றி இவ்வுலகம் ஒன்றி வாழ
அன்னைசக்தி வண்ணம் பல ஆனாள்! ஆனாள்.

அப்பனோடு அம்மையுமே இணைந்து நிற்கும்
ஆனந்தக் கனவு தனைமலருக்கீந்தாள்
ஒப்புக்குச் சொன்னதல்ல மருக்குள்ளே
ஒருகுடும்பம் வாழ்வதன்னை தெரிந்துகொள்வீர்
இப்புவிமேல் எத்தனையோ உயிர் உண்டு
எத்தனை புல்பூண்டு கொடிகள்என்று
தப்பின்றி அறிந்துவிட்டால் அப்பன் ஆத்தாள்
சதிராடும் கூத்தெல்லாம் தெரிந்துபோகும்.

மலர்போல, இலைபோல, காய்கனியே போல
வண்ணத்தில் பல்லுயிர் படைத்தாள்
அலரின்றி அவைதாமே வாழ்க என்று
அருள் கொண்டு அன்னையவள் படைத்தகோலம்

நிலவுலகில் நினைந்துவிட்டால் நெஞ்சம் விம்மும்
நெட்டு யிர்ப்பும் கூடவரும், கண்ணீர்துள்ளும்
பலவண்ணக் கவிதையதைக்கூட்டி அன்னை
பாரெல்லாம் ஓவியமாய் தீட்டிவிட்டாள்.

இத்தனை இத்தனை வண்ணம் காட்டி
இவ்வுலகை வளர்க்கின்ற வாய்ப்பை நோக்கில்
எத்தனை எத்தனை இன்பம் வைத்தாய்
எங்கள்தாய் வாழ்கஎன்று மகிழ்ந்துஆடி
ஒத்திந்த மனிதகுலம் ஒன்றே காணும்
உயர்தன்மை பெற்றுவிட அன்னைஎன்றும்
எத்தனை எத்தனை விதமாய் கோலம்காட்டும்
இணையடிகள் சரண்புகுவோம் வாழ்கஎன்றே.

சத்தாக, முடிவாக, செந்தமிழில் சொல்ல
தவிக்கின்ற நெஞ்சத்தில் தாங்கும் சொற்கள்
வித்தாகி, மரமாகி மாந்தர் உள்ளம்
வேட்கின்ற கனியாக அமையவென்று
சத்தியமாய் பாடிவைத்த கவிதை தன்னில்
தன் மனதை செலுத்தி இங்கே வாழவாரீர்
உத்தமரே, உலகோரே வண்ணம் காண
உளங்கொண்ட பெரியோரே வணக்கம் வாழி.

குழித்தலையில் நடைபெற்ற கவியரங்கத்தின் தலைமைக் கவிதை.

## ஒளி வட்டத்தில் ஒரு கோபுரம்!

—o—

திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சிறப்புக்கூட்டம், ராஜேந்திரா தனிப்பயிற்சிக் கல்லூரியில் (4-2-68) தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் திரு. பி. ராமசாமி ''சொல்லும் பொருளும்'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

தலைவர், தமது தொடக்கவுரையில், ''உலகப் பெருமொழிக்கு ஈடாகத் தமிழை உருவாக்க வேண்டும் என்று பேசப்படுகிறது. தமிழ் அந்த அளவு தகுதிபடைத்த வளமான மொழிதான். ஆனால், அதற்கு முன்னதாக தமிழின் வல்லமையை —தகுதியை நாம் முழுமையாக உணர்ந்துகொள்ள முயலவேண்டும். 'சொல்லுக்குள்ளே சொல், சொருகிக் கிடக்குது — சோதித்துப் பாரடி, ஞானத்தங்கமே!' என்று, தமிழ்ச் சான்றோர்கள் கூறினார்கள். அந்தவகையில் தமிழ்ச்சொல்லின் மேல் மட்டத்திலே காணப்படும் பொருளையும், அதன் உள்ளே விரவிக் கிடக்கும் தன்மையையும் நாம் உணர்ந்துகொள்வதில் ஆர்வம் காட்டவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

இந்த வட்டத்திலே, சிறப்புச் சொற்பொழிவாளர், ஒரு இனிதான 'கோபுரம்' எழுப்பிக் காட்டினார். தமிழின் செழுமை கூட்டிய பெருமக்களான வள்ளுவர், அருணகிரிநாதர், தாயுமானவர், திருமூலர், பட்டினத்தார், வள்ளலார் போன்றோரின் சொற்களிலே அவர் அதற்கான 'கற்'களைத் தேர்ந்து எடுத்தார். தமிழில் தனிச் சொல்லின் அழுத்தத்தை — அதற்குள்ளே தோன்றும் ஒளி அம்சத்தை-அதற்கென அமைந்த ஆற்றலை-அந்த ஆற்றல் செயலாற்றப்பட வேண்டிய புனிதத் தன்மையை-மனப் பக்குவத்தின் அவசியத்தை அவர் விளக்கிய பாங்கு, பற்பல 'பதுமை'களை ரசிக்கும் உணர்வை தோற்றுவித்தது.

சிறப்புச் சொற்பொழிவுக்கு 'மகிழ்ச்சி' தெரிவித்து, சங்க உறுப்பினர் திரு. மாறன் பேசுகையில், 'உயர்ந்த செல்வத்தை மொழியால் பெற்ற கோடீசுவரர்கள், நாம். ஆனால், அந்த செல்வம் இருக்கும் இடத்தை அறிந்து, புரிந்து தெளியும் அமைதி நம்மிடையே இல்லை; பரபரப்புடன் செயலாற்றிக் கொண்டு இருக்கிறோம். இத்தகைய சொற்பொழிவுகள், நமக்கு அந்த வகையில் நற்பயன் அளிக்கும்'' என்று குறிப்பிட்டார்.

பொதுச் செயலாளர் திரு. பட்டுக்கோட்டை சி. பி. குமாரவேல் நன்றி கூற, கூட்டம் நிறைவெய்தியது.

## ஞானப் பயிர்

பூமியைக் கொத்துகிறோம். கலப்பை கொண்டு உழுகிறோம். மண்வெட்டி கொண்டு கொத்துகிறோம். என்றாலும்கூட பூமி நம்மை வெறுத்ததில்லை. பகைத்ததில்லை. அதற்குப் பதில் தனக்கு மானிடாகளால் செய்யப்படும் துன்பங்களை சகித்து அத்துன்பங்களையே தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தன்னை எளிமையாக்கி பயிர் தன்னிடம் வளருவதற்குத் தக்கதான பக்குவத்திற்கு தன்னை தயார்படுத்திக்கொள்ளுகிறது. மனிதன் தனக்கு வரும் துன்பங்களை மனதோடு ஏற்று தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டால் ஞானப்பயிர் மனிதனிடத்து வளரும் என்ற தத்துவத்தை பூமி மனிதனுக்கு சொல்லிக்கொடுக்கிறது அல்லவா?

— ரெட்டியார்.

# எழுத்தாளன்

கனவு 11] பிலவங்க, மாசி (15-2-68) [கற்பனை 2


# நமது வேதனை

உள்ளத்தின் வலிமையால் தன்னையும், தன்னை எதிர்ப்பவர்களையும் சமாளிக்கும் பேராற்றல் மனித வர்க்கத்திற்குக் கிடைத்த வாழ்வுப் பரிசு ஆகும். நம் முன்னவர்கள் தங்கள் உடல் வலிவை பலியிட்டே உள்ளத்தின் வலிவைப் பெற்றார்கள். அனுபவித்தார்கள். அவர்களின் அனுபவ உரிமை, அந்த பேராற்றல் நமக்கு இயல்பாக கிட்டியிருக்கிறது. உடல் வலிவு ஒரு குறிப்பிட்ட எல்லைக்கும் சக்திக்கும் உட்பட்டது. உள்ளத்தின் வலிவு எல்லையற்ற பேராற்றலும், மகத்தான சக்தியும் உடையது.

உடல் வலிவு உணர்ச்சியால் உந்தப்படுவது. உள்ளத்தின் வலிவு உணர்வால் ஸ்திரப்படுவது. வளர்ச்சி பெறாத மனம்படைத்தவர்கள் தங்கள் உணர்ச்சிகளுக்கு உடல் வலிவுகொண்டே தீர்வு காணுகிறார்கள். மிருகங்கள் தன் உடல் வலிவைக்கொண்டே வாழ்கின்றன. உடல் வலிவு கொண்டு வாழ்பவைகளைக் கால் நடைகள் என்றும், மனிதர்கள் உள்ளதின் வலிவால் உணர்வால் ஸ்திரப்படுகிறவர்கள் என்பதால் கால்களால் நடந்தாலும் கால்நடைக்கணக்கில் சேர்க்காமல் உயர்த்தப்பட்டும் வைத்தார்கள். மனிதன் கருத்து நடைவுடையவன். தன் கருத்துக்கு முக்கியத்துவம் வைத்து அதனை உளத்தின் வலிவால், சிந்தனை சிறப்பால், பெற்று அனுபவிப்பவன் என்றும் தரம் பிரித்து வைத்தார்கள்.

இயற்கையாக ஒவ்வொருவருக்கும் கிடைத்த இந்த பேராற்றலை மனிதன் சந்தேகத்தாலும், பதட்டத்தாலும் இழந்துவிட்டு, உணர்ச்சி வசப்பட்டு, உடல் வலிவு கொண்டு எதையும் தீர்க்க முனைகிறான் என்பதை பாரதி தெளிவாகக் கூறியிருக்கிறார்.

உள்ளத்தின் திட்பத்தால் தீர்க்கப்படவேண்டிய அனைத்தையும், உடல் வலிவாலும், உணர்ச்சியின் துடிப்பாலும் தீர்த்துவிடலாம் என்று இளம் உள்ளங்கள் செய்யும் செயல்களின் விளைவுகளைக் கேட்டுத் தமிழ் எழுத்தாளன் வேதனைபபடாமல் இருக்க முடியவில்லை.

மலையில் இருக்கும் தேன் கூட்டை சிலர் விளையாட்டாகவும், விஷமத்தனத்தோடும் கலைத்து உசுப்பிவிட்டு விடுவார்கள். தேனீக்கள் எதிர்பட்டவர்களையும், மிருகங்களையும், கொட்டி உபத்திரம் அடையச் செய்துவிடும். சில சமயம், உசுப்பி விட்டவர்களும் அதன் சீற்றத்திற்கு ஆளாகி கொட்டுபடுவதும் உண்டு. பல தடவை இவ்வாறு உசுப்பி விடபட்ட தேனீக்கள் தேன் சேர்ப்பதை மறந்து எதிர்பட்டவர்களை யெல்லாம் கொட்டுவதில் உற்சாகம் காட்டி குளவிகளாக மாறிவிடுவதும் உண்டு.

தேனீக்களின் கூட்டத்தால் தாக்கப்படும்போது ஓடுபவர்களைக்கண்டு, தேனீக்கள் நினைக்கும் ஆற்றல் படைத்திருக்குமானால் சர்வ வல்லமையுள்ள மனிதர்களே எங்களைக்கண்டு பயந்து ஓடுகிறார்கள். இந்த மிருகங்கள் எம்மாத்திரம் என்று நினைக்குமானால் எப்படியோ! அதனைப்போன்ற நிலை தமிழகத்திலும், பாரதத்தின் பல்வேறு பகுதிகளிலும் உருவாகி வருகிறது. உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த அவநிலை நாட்டுக்கோ மொழிக்கோ, நாட்டு மக்களுக்கோ நல்லதல்ல.

தொன்றுதொட்டு தமிழ்மக்களுக்கு உள்ள தனித்திறமை, பெருமை, உடல் வலிவைக் கொண்டு ஏறபட்டதல்ல. உள்ளத்தின் திடமே தமிழ் மக்களின் தனிச் சிறப்புக்கு ஏற்புடையதாக இருந்துவருகிறது. மூளையால் மதிநுட்பத்தால் தமிழன் நாகரீகமுள்ளவன் என்று பல்லோராலும் பல காலத்தவராலும் மதிக்கப்பட்டு வந்திருக்கிறான்.

அந்த தனி சிறப்பு இப்பொழுது குன்றி வருகிறது தேய்ந்து வருகிறது. அழிந்து வருகிறது அழிக்கப்பட்டு வருகிறது. எந்த ஒரு பிரச்சனையையும் பலாத்காரத்தாலும் உடல் வலிவாலும்தான் தீர்த்துவிடலாம் என்று முடிவுகட்டுவார்களானால் சுதந்திரம் என்பதில் அடிப்படையே தகர்த்தவர்களாகிறார்கள். தமக்கு பிடிக்காததை எவர் சொன்னாலும் உடனே ஊரை ஒன்றுகூட்டி பலாத்காரத்தால் பணியவைப்பது என்று துணிவோமானால் படித்த படிப்பும், பெற்ற ஞானமும், பாரம்பரியமான பண்பாடு அத்தனையும் ஒரு நொடிக்குள்போட்டு உடைத்தவர்களாகி விடுகிறோம் என்பதை இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் மனதில் இருத்தி வைப்பது நல்லது.

பத்திரிகை சுதந்திரம் என்பது ஒரு உயர்ந்த பண்பு. மக்களின் மனப்பாங்கை புரிந்துகொள்ளும் ஒரு கண்ணாடி. அல்லது மக்களை பயிற்றுவிக்கும் சர்வ கலாசாலை ஒரு பத்திரிகை. தமிழகத்தில் இந்த தொழிலுக்கே அபக்கியாதி ஏற்படும்படி பொது மக்களை கலவரம் செய்யத்தூண்டும் அளவுக்கு பத்திரிகை வெளியிடுவதும் பத்திரிகையின் தூண்டுதலால் ஆங்காங்கு கலவரங்கள் மிகைப்படுத்தப்பட்டு பரவுவதும் இப்பொழுது நடைபெறுகிறது.

இந்த பயங்கர போக்கிலிருந்து இதனை திருப்பாவிட்டால் எதிர்காலத்தில் அமைதியோடு எந்த ஒரு தனி மனிதனும் வாழமுடியாது பேசமுடியாது என்ற நிலை ஏற்பட்டுவிடும் என்று எச்சரிக்கிறோம்.

மிக மிக துணிச்சலுடன் செய்யப்படும் இந்த செயலை அரசு தடுத்து நிறுத்தவேண்டும், அல்லது தமிழகத்தின் மீது அக்கரையுள்ள ஆன்றோர் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தமிழ்ப் பெருமக்களை எழுத்தாளன் பணிவுடன் கேட்டுக்கொள்கிறான்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

## எட்டயபுரம் கவிஞர்களும் கலைஞர்களும்

# 3. உமறுப்புலவர்

கி. முத்துராமகிருஷ்ணன்.

அராபியநாடு பாலைவனம் மிகுந்த நாடு. அந்த நாட்டிலிருந்து ஒரு கூட்டத்தினர் வாசனைத் திரவியங்கள் விற்கும் வணிகர்களாக இந்தியா வந்தனர். இந்தியா வளமான நாடு வலிமை மிக்க நாடு என்பதில் அப்பொழுது ஐயமில்லாமல் இருந்தது.

இவ்வணிகக் கூட்டத்தில் சேகு முதலியார் என்பவர் ஒருவர். இவர் எட்டயபுரம் வந்தார் அரசரைக் கண்டார். வாசனைத் திரவியங்களைவிற்றார். பின்பு நாகலாபுரம் சென்றார். அடுத்து எட்டயபுரம் வந்தார். எட்டயபுரத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டார். அரசரும் அவருக்குப் படி கொடுத்தார். சேகு முதலியார் எட்டயபுரத்தில் தங்கி வியாபாரம் செய்தார்.

எட்டயபுரம் 24 பட்டத்தரசர் வெங்கடேசுர எட்டப்பன் என்பவர் கி. பி. 1739ல் ஆட்சிப்பொறுப்பேற்று 30 ஆண்டுகாலம் ஆட்சி செய்தார். இவர் காலத்தில் உமறு எட்டயபுரத்தில் பிறந்தார் வளர்ந்தார்.

சேகு முதலியார் தன் பையன் உமறுவை ஒரு நாள் அரச சபைக்கு அழைத்துச் சென்றார். அங்கு கடிகையார் நாகூர் முத்துப்புலவர் இன்னும் பலர் கூடியிருந்தனர் மன்னரைப் புகழ்ந்து பேசி, பாடிக் கொண்டிருந்தனர். இதனைக்கண்ட உமறு ஏழு வயதினர். மனம் வாடினார். சும்மா இருந்தார்.

உமறுவைக் கண்ட கடிகையார் சேகு இது யார் என்றார். இவன் என் பையன் என்றார். அப்படியா மிக்க மகிழ்ச்சி. பையா இங்கு வா. நீ என்ன படிக்கிறாய் என்று கேட்டார். நான் கருவை யந்தாதி படிக்கிறேன் என்றான். எங்கே ஒரு பாட்டு கூறு என்றார் கடிகையார். படீரென்று கீழ்க்கண்ட பாடலை உமறு கூறினார்.

சங்கக் குழையனைத் தென்கருவா
புரித்தானு வைவான்
கங்கைச் சடையனைப்பாடல்
செய்யாத கவிப்புலவீர்
அங்கச்சுமை கொண்டஎழு
நான்குகோடி அழிநரகப்
பங்கத்தில்விழ வல்லேபோன்று
வார்தமைப்பா டுவதோ.

இதனைக் கேட்ட கடிகையார் திடுக்கிட்டார். தன்னையே நேரடியாகத் தாக்கியதாக எண்ணினார் என்றாலும் முதலியார்வாள் பையன் இனிமேல் என்னிடமே தமிழ் பயிலட்டும் என்று கூறி உடனே உமறுவை தன் வீட்டிலேயே வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்தார். பல ஆண்டுகள் சென்றன. எட்டயபுரம் அரண்மனைக்கு ராமநாதபுரம் சேதுபதியும் அவரது அமைச்சர் சீதக்காதியும் வந்து இருந்தனர். இப்படி பலசமயம் வந்து போவது உண்டு. அப்படி ஒரு நாளில் வடதிசைப் புலவன் வாலைவாரிதி என்பவன் எட்டயபுரம் வந்தான். இவன் யாரையும் வாதில் வெல்பவன். எளிதாக யாரையும் மடக்கிவிடும் புத்திக் கூர்மையும் சொற்சாதுரியமும் உள்ளவன்.

எட்டயபுரம் வந்து மன்னரிடம் தன்னிடம் வாதுக்கு புலவர்களை வரும்படி அழைத்தான். மன்னரும் ஒப்புதல் தெரிவித்து அவைக்களம் கூட்டினார். வாலைவாரிதிப் புலவருடன் கடிகையார் வாதிடவேண்டும் என்று நிச்சயத்து கடிகை முத்துப் புலவரிடம் கூறிவிட்டார். குறித்த நாள் வந்தது. குறித்த நேரம் வந்தது மன்னர்சபை கூடியது. மந்திரி பிரதானிகள் மக்கள் யாவரும் சபையில் கூடிவிட்டனர். வாலைவாரிதிப் புலவன் சபைக்கு வந்து ஆசனத்தில் அமர்ந்தார். ஒரு இடம் காலியாக இருந்தது. அது தான் கடிகை முத்துப்புலவர் அமரும் பீடம். ஏன் இன்னும் கடிகையார் வரவில்லை என்ற ஒலி எங்கும் எழுந்தது.

அதே சமயம் வீட்டில் கடிகையார் அரிய யோசனையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டு இருக்கிறார். உடன் 17 வயது நிரம்பிய உமறு நின்றுகொண்டு இருக்கிறார். குருவின் நிலையக்கண்ட உத்தம சீடன் உமர், குருவே ஒரு விண்ணப்பம் தாங்கள் அனுமதித்தால் நானே சென்று வாலைவாரிதியை வெற்றி கொண்டு திரும்புகிறேன். அனுமதியுங்கள் என்று கேட்டார். கடிகையார் தன் சீடன் மீது அதிகமான நம்பிக்கை வைத்து சரி சென்றுவா. வென்றுவா என்று வாழ்த்தி அனுப்பினார்.

உமறு சபைக்கு வந்தார். யாவரும் ஆச்சரியம் கொண்டனர். புலி இருக்க வேண்டிய இடத்திற்கு பூனை வருகிறது. எதிரியோ கடகத்தினால்பாடி மடக்க வல்லவன். தந்திரமாக பேசும் திறமைபடைத்தவன் என்று எண்ணிக் கொண்டிருக்கும் நேரத்திற்கு உமறு தன் குருவின் பீடத்தில் அமர்ந்து வாதினை ஆரம்பிக்கலாம் என்றார்.

வாலைவாரிதி தன் கடைக்கண்ணால் உமறுவைக்கண்டார். உதாசீனம் கொண்டார். சிறுவன் அதிலும் மாணவன் பிள்ளை ஒருவன் தம் முன் சரிசமானமாக வாதுக்கு வந்துவிட்டான் என்று துச்சமாக எண்ணி எள்ளி நகையாடி வழக்கமாக பாடும் விதத்தை மாற்றினார். வாலைவாரிதி என்று அறியாயோ என்று பாடும் கடகம் அன்று உமறு கண்டு வாலைவாரிதி என்று அறியாயோ 'பிள்ளாய்' என்ற பதம் சேர்த்துப் பாடியது உமறு அவனை பதம் பார்த்துவிட்டார்.

சமரதுரகதந்துங் சமனருஞ்சபாசெனச் சரிசமான
மீதிலே
அமரஒரு நரகொம்புதினமும் சுமாசெலும்
அமிர்த கவிராசன் நானே
திமிரபகைவரைவென்ற பருதியெனும்
எமதெட்ட தீரன்அணி வாயில் வித்வான்
உமறுகுமுறிடில் அண்டமுகடும்படீரெனும்
உள்ளம்அச்சம் வையும்பிளாய்.

என்று உமறின் எழுத்தாணி எழுதியது. வாலைவாரிதியின் கடகம் படீரென உடைந்தது. புலவரின் மனமும் உடைந்தது. கர்வம் சிதைந்தது. புத்தியும் தெளிந்தது. உமறுவிடம் மன்னிப்புக் கேட்டார். தன் தோல்வியை ஒப்புக்கொண்டார்.

உமறு அது முதல் உமறுப்புலவர் ஆனார். மன்னரும் மக்களும் மனம் மகிழ்ந்தனர். உமறுபெற்ற வெற்றி கண்டு தமிழ் உலகில் முரசு அறைந்ததுபோல் இருந்தது. சீதக்காதியார் உடன் உமறுவைக்கண்டு பேசினார். பூனை புலியாகிவிட்டது.

சேதுபதிச் சீமையார் கம்பராமாயணம், வில்லிபாரதம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், கந்தபுராணம் முதலியன விரிவாக பிரசங்கம் செய்வதைக்கேட்டவர். தங்கள் மதத்தினர்யவரும் அறிய தெரிய புரிய மகமது நபிநாயகம் அவர்கள் வரலாற்றினைப் பாடும்படி கேட்டுக்கொண்டார். உமறு அதற்கு நபிகளின் வரலாற்றினை விரிவாக எனக்கு கூறினால் தான் இயன்ற மட்டும் பாடித் தருவதாகக் கூறினார்கள்.

உமறுவை கடிகையார் பாராட்டினார். இனி நீயே அரசவைப் புலவனாக வீற்றிரு என்று வாழ்த்தினார். அதன் பின் உமறு திருமணம் செய்து கொண்டு இளசையில் வாழ்ந்து வந்தார்.

சீதக்காதி மறைக்காயரின் அழைப் பின்படி உமறுப் புலவர் கீழக்கரை சென்றார். அங்குள்ள பள்ளிவாசல் மதப்பெரியார் சதக்கத்துல்லா என்பவர் இவருக்கு நபிநாயகம் வரலாறு கூறினார். பரங்கிப்பேட்டை முகமது நயினார் என்பவரும் உமறுப்புலவரிடம் நபிநாயகம் அவர்கள் வரலாறு கூறினார்கள். ஒருவாறு உமறு அவர்கள் தன் மனதில் நபிநாயம் அவர்கள் உருவம் மொழிகள் யாவற்றையும் தன கருத்தில் கொண்டார்.

சீருப் புராணம் பாடத் தொடங்கினார். சுமார் 87 பாடல்கள் பாடியபின் அடுத்த பாடல் வராமல் நின்றுவிட்டது. மூன்று தினம் கழித்து தன் மகன் முத்துவலப்பா தற்செயலாக அந்த பாட்டிற்கு அடுத்த பாடலை எழுதிவைத்தார். உமறுப் புலவர் அவனை உச்சிமோந்து அரவணைத்தார். பாலகன் மரணமானான்; சிறிது நாளில் வள்ளல் சீதக்காதியும் காலமானார்.

அபுல் காசீம் என்பவரின் உதவியுடன் சீராப்புராணம் முழுவதும் பாடி முடித்தார். சீராப் புராணம் முற்றுப் பெற்ற செய்தி கேட்டு முகமதியர் பலரும் தங்கள் தங்கள் ஊரிலேயே இதனை அரங்கேற்றம் செய்யவேண்டும் என்று வேண்டினர்.

கீழக்கரையிலேயே சீராப் புராணம் அரங்கேற்றம் செய்ய ஏற்பாடாயிற்று. தமிழ் மக்கள் யாவரும் கூடியிருந்து அதனைக் கேட்டனர்.

கம்பன் தன் ராமாயணத்தில் தன்னை ஆதரித்த திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலை வாழ்த்திப் பாடியதுபோல் உமறுப் புலவரும் தன்னை ஆதரித்த சதக்கத்துல்லாவையும் அபுல்காசீம் என்பவரையும் வாழ்த்திப் பாடியுள்ளார்.

### சதக்கத்துல்லாவைப் பாராட்டிப் பாடியுள்ள பாடல்

நம்மையாளுடையான் வேதநபி திருவசன
நந்தினோர்
சம்மதித்திட பார்எல்லாம் தழைக்கவே விளக்கம்
செய்தோன்
இம்மையும் மறுமையும் பேர்இலங்கிய
சதுக்கத்துல்லா
செம்மல் அடிஇரண்டினை யும்சிந்தையில்
இருத்தினேனே

### இதேபோல் அபுல்காசீம் என்ற தனது உற்ற அரும் நண்பரை வாழ்த்திப் பாடிய பாடல்

வள்ளல்என்று உதவிப்பெயர் நிலைநிறுத்தி
வளம்தரும் புகழப்புல் காசீம்
உள்ளகம் நிறைந்த செம்மலர் பதந்தொட்டு
ஒளிபெரு இணைவி ளக்கேற்றி
விள்ளரும்ப வளம்விரிந்தன கனிவாய்
விளங்கிட வாழ்த்தெடுத்துவந்து
தெள்ளமுதனைய முகமதுநபியைச் சபாதி
ருமிமிசைக் கொண்டார்.

சீராப் புராணம் அரங்கேறிய பின் அவருக்கு மக்கள் மகத்தான விருந்தும் உபசரிப்பும் செய்தனர். தொழுதனர் ஏற்றிப்புகழ்ந்தனர். சில நாட்களுக்குப் பின் எட்டயபுரம் வந்தார். எட்டயபுரத்தில் புகழ் படியில் ஏறி இன்று புகழின் உச்சியில் நின்ற உமறுவை எட்டயபுரம் மக்கள் மன்னர் யாவரும் மனமார நெஞ்சார வரவேற்றனர். எட்டயபுரத்திலே தங்கி தமிழை வளர்க்கும்படி கூறி மன்னரும் அவருக்குப் படித்திட்டம் கொடுத்து உதவினார். எட்டயபுரம் மக்கள் இவரை உமறப்பா என்ற பெயரிலேயே வழங்கி வந்தனர்.

சீராப் புராணம் அறம்பொருள் இன்பம் கொடுப்பவை இதனை விலாத்தத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம் ஹிஜிரத்துக் காண்டம் என்ற மூன்று காண்டமாகவும் 42 படலங்களாகவும் 5027 விருத்தமாக பாடி உள்ளார். இது தவிர இவர் நொண்டி நாடகம் முதுமொழிக் காஞ்சி என்ற இரு நூல்கள் எழுதி உள்ளார். உமறுப்புலவர் எட்டயபுரத்திலே மரணம் எய்தினார். அவரது சடலம் அடக்கம் செய்த இடத்தில் ஒரு மண்டபம் கட்டி தொழுகை செய்துவருகின்றனர். அ. பிச்சைக்கோனார் என்பவர் 1920வது வருடம் இதனை கட்டிவைத்துள்ளார்.

எட்டயபுரம் மக்களில் இந்துக்கள் சிலரும் இன்று உமறு என்ற பெயரில் விளங்குகிறார்கள். இந்து முஸ்லீம் பேதமில்லாமல் வாழ்ந்து வழிகாட்டியவர் உமறு.

சீராப் புராணம் இன்று மக்களிடையே நன்கு பரவ இல்லை. அதிலுள்ள அரபு மொழிகளுக்கு இன்னும் சரியான மொழிபெயர்ப்பு இல்லை. சீராப் புராணம் மலிவுப் பதிப்பாக வெளியிடவேண்டும். இதற்கு அரசாங்கம் ஆவன செய்தல் வேண்டும். உமறு அவர்கள் நினைவாக எட்டயபுரத்தில் 1915ம் வருடம் வரை அரண்மனையாரின் உதவியுடன் அன்னதானம் நடைபெற்று வந்தது அதுவும் தற்சமயம் நின்றுவிட்டது.

எட்டயபுரம் மக்கள் என்றும் தமிழ் பற்றுடையவர்கள் என்ற காரணத்தினால் உமறுப்புலவர் அடக்கம் ஆன தெருவிற்கும் உமறுப்புலவர் தெரு என்று பெயர் சூட்டி உள்ளனர். பஞ்சாயத்து அலுவலகம் இதனை செய்துள்ளது.

ஆண்டுதோறும் உமறுப் புலவர் விழா எட்டயபுரத்தில் சிறிய அளவில் நடைபெறுகிறது. நபிநாயகம் பிறந்த தினத்திற்கு நெல்லை மாவட்டத்தின் பலபக்கமும் உள்ள முகமதிய நண்பர்கள் கூடி தொழுகை நடத்திய பின் அன்று இரவு ஒரு சிலர் உமறு மொழி பற்றி கூறுகிறார். இதனை காது குளிரக் கேட்கலாம். பின் யாரும் இவரை நினைப்பாரில்லை. எனவே நெல்லை மாவட்ட மக்கள் சீராப் புராணம் சீரான நேரான நேர்த்தியான பதிப்பாக வெளிவர "அவர் புகழ் தமிழ்நாட்டிலும் மட்டுமல்லாமல் உலகெலாம் ஒலிக்க" பரப்ப ஆவன செய்வார்களாக. உமறுப்புலவரின் தந்தையாரும் எட்டயபுரத்தில்தான் அடக்கம் ஆகியுள்ளார். தகப்பனும் மகனும் பக்கத்திலேயே இருக்கிறார்கள். உமறு புகழ் உலகு எங்கும் ஒலிக்க உழைப்போமாக.

— —


---

## ஆறுவது சினம்

— — —

ஆறுவது சினம் என்று பெரியவர்கள் சொன்னார்கள். சினம் வந்தவுடன் சற்று வேறு போக்குக் காட்டினால் சினம் ஆறிவிடும். சினம் என்பது சூடான காபிபோல. சற்று கவனிக்காமல் விட்டு விட்டால் தானே ஆறி விடும். கோபம் வந்ததும் அதனை ஆற்றத் தெரியாதவர்கள், வேறு மாற்றுதற்கு வழி அறியாதவர்கள் உடனே கண்ணாடியில் தங்கள் முகத்தைப்பார்த்தால், முகம் இருக்கும் விகாரத்தை அறியலாம். கோபம் வந்ததும், முகம் விகாரம் அடைவது போல உள்ளமும், குணமும், பண்பும் விகாரம் அடைகின்றன என்ற உண்மையை அறியலாம். அதனால்தான் பாரதி சொன்னார்: மிச்சத்தைப் பின் சொல்வேன் சினத்தை முன்னே வென்றிடுவீர், மேதினியில் மரணம் இல்லை என்று. அடிக்கடி கோபத்திற்கு ஆளாகுவோன் அற்ப ஆயுள்காரன் என்பது நிச்சயம்.

—"ரெட்டியார்"


சிறு குடும்பம் ... போதுமே !
குடும்பக் கட்டுப்பாடு நிலையத்தின் சின்னம் சிவப்பு முக்கோணம்
davp 67/337

# வேர்ட்ஸ் வொர்த்தின்

## பால பருவ தத்துவார்த்த விளக்கம்

திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கக் கூட்டம் 21-1-68 அன்று மாலை நடைபெற்றது. சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் திரு C.S. கமலபதி அவர்கள் வேர்ட்ஸ் வொர்த்தின் கவிதைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினார்கள்.

பேராசிரியர் அவர்கள் வேர்ட்ஸ் வொர்த்தினது சிறப்பியல்புகளைப் பற்றிக் கூறும் போது ஐரோப்பிய இலக்கிய வரலாற்றிலேயே அவன் ஒரு பெரும் புரட்சிக் கவிஞன் என்று குறிப்பிட்டார்கள்.

வேர்ட்ஸ் வொர்த்தின் காலத்திற்கு முன் படைக்கப்பட்ட இலக்கியங்கள் அனைத்தும் முடி சார்ந்த மன்னர்களைப் பற்றியும், அவர்தம் பிடி சார்ந்த ராணிகளைப் பற்றியும் பேசுபவையாக நின்றனவே அன்றி குடி சார்ந்த இலக்கியமாக அமையவில்லை. ஆனால் வேர்ட்ஸ் வொர்த் படைத்த கவிதைகள், அவன் கவிதையின பாத்திரங்கள் எல்லாம் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் சர்வ சாதாரண மனிதர்கள் தான். ஆறறிவு பெற்ற மனிதனை மட்டுமல்ல, ஐந்தறிவே கொண்ட உயிரினங்களில் அற்பமென்று நினைக்கப்பட்டவற்றையெல்லாம் கூட அவன் கருப் பொருளாகக் கொண்டு கவிதையாத்திருக்கிறான்.

பாமர மக்களுக்குப் புரியாத அருஞ்சொற்களைக் கவிதைகளிலும், காவியங்களிலும் சொல்லாட்சியாகக் கொள்வதை மரபாக மதித்து வந்த ஒரு கால கட்டத்தில், சாதாரண மக்கள் பேசக்கூடிய கொச்சை வழக்குகளைச் சிறிது செப்பமிட்டு, கொச்சையாகவும் இல்லாமல், இலக்கிய மரபுச் சொற்றொடர்களாகவும இல்லாமல், இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில எல்லோருக்கும் புரிகின்ற வகையில் சொல்லாட்சி செய்த முதற்கவிஞன் அவனே.

போட்டுப் பழகிய உவமை, கேட்டுப் பழகிய செவிகள், பாட்டுக்கிதுவொரு மரபு என்று வளர்ந்த இலக்கிய உலகத்தில், சொல் புதிதாய், சுவை புதிதாய், சொல்லவந்த பொருள் புதிதாய், சொல்லுகின்ற முறை புதிதாய், சொல்லுகின்ற உவமையெலாம் மிகப் புதிதாய்ப் படைத்தளித்த புரட்சிக் கவிஞன் அவன்தான்.

பழைய மரபுகளையே அவனும் பின்பற்றி இருப்பானேயானால், பத்தோடு பதினொன்று, அத்தோடு இவனொன்று என்று தான் நாம வேர்டஸ் வொர்த்தைப் பற்றி எண்ண வேண்டியிருந்திருக்கும், ஆனால் வேர்ட்ஸ் வொர்த் பழைய மரபுகளைப் பின்பற்றியவன் அல்ல. அவனே ஒரு புதிய மரபு சமைத்தவன்.

இயற்கைச் சூழலிலேயே பிறந்து வளர்ந்து இயற்கையிலிருந்து பிரிக்கவொண்ணாது ஒன்றிக் கலந்த வாழ்க்கை அவன் வாழ்க்கை.

இயற்கை அன்னை அழகு முகமாகவும், அச்ச முகமாகவும அச்சத்திலும் ஒரு அழகு நிரம்பக் கோலம் காட்டுகின்றாள,

இயற்கையைக் கண்டு ரசிப்பதும், அந்த அழகை, அந்த அழகு தரும் எழுச்சியை, அதன் தன்மையை, இம்மியும் பிசகாது கவிதை யாக்குவதையே அவன் கவிதை எழுதும் முறையாகக் கொண்டான். அவன் கவிதையில் நாம் காண்பதெல்லாம் உண்மையும் உண்மை சார்ந்த அனுபவங்களும் தான். சுருங்கச் சொன்னால் இயற்கையோடு இரண்டறக் கலந்து இயற்கையையே பாடிய ஒரே கவிஞன் வேர்ட்ஸ் வொர்த்.

அந்த மகா கவிஞனுடைய "மீண்டும் தனது குழந்தைப் பருவத்தை நினைத்துப் பார்த்தல்" என்ற கவிதையை எடுத்துக் கொள்வோம். உலக தத்துவ மேதைகளெல்லாம் ஒரு மித்துச் சொன்ன ஒரு கருத்தாகிய "பிறக்கின்ற குழந்தைகள் அக நினைவுகள் எதுவு மறறவையாகவே பிறக்கின்றன" என்ற கூற்றுக்கு மாறுபட்ட ஒரு கருத்தை வேர்ட்ஸ் வொர்த் இந்தக் கவிதையில் தெரிவிக்கின்றான். பிறக்கின்ற குழந்தையின் ஆன்மா புனிதமான சில நினைவுகளுடனேயே மண்ணுலகுக்கு வருகிறது என்று அவன் சொல்கிறான. ஆண்டவனுடைய பரலோகத்தில் இருந்து வருகின்ற குழந்தை அந்த ஆண்டவனுடைய நினைவுடனேயே வருகிறது.

மண்ணுலகிலே ஒரு ஆன்மா உதிக்கிறது என்றால் விண்ணுலகிலே ஒரு ஆன்மா அஸ்தமிக்கிறது என்று பொருள். அப்படி விண்ணுலகிலே அஸ்தமிக்கிற ஆன்மா அந்த நினைவு அழியாமலேயே பிறக்கிறது. அந்தப் புனித ஆன்மாவை உலகமென்னும் செவிலித்தாய் ஆண்டவனுடைய நினைவைக் காட்டி காட்டி, தெய்வீகத் தன்மையை ஊட்டி ஊட்டி வளர்க்கிறாள். நான்கு அல்லது ஐந்து வயது வரை அந்த தெய்வீகத் தன்மை மாறாமல் குழந்தை வளர்கிறது. ஐந்துக்கும் அப்பால் குழந்தையின் மேலே பூமிப் புழுதி படியத் தொடங்கி விடுகிறது. பிறகு குழந்தை மட்டும் இருக்கிறது. குழந்தையை விட்டு தெய்வமும், தெய்வீகத் தன்மையும் விலகிப் போய் விடுகின்றன.

இந்தக் கருத்தைப் பேராசிரியர் அவர்கள் வலியுறுத்திச் சொல்லும் போது நமக்குப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின்,

பிறக்கும் போது பிறந்தகுணம்
போகப் போக மாறுது
இருக்கும் போது பிரிந்தகுணம்
இறக்கும் போது சேருது

என்ற பாடல் வரிகள் நினைவுக்கு வந்தன.

பேராசிரியர் அவர்கள் தொடர்ந்து பேசும்போது, "நாம் எந்தவொரு உண்மையின் தரிசனத்துக்காக வாழ் நாளெல்லாம் காத்திருக்கிறோமோ அந்த உணமை குழந்தையின் கண்ணுக்கு எளிதாகத் தானே வந்து காட்சி கொடுககிறது. தான் கண்டதைச் சொல்ல அந்தக் குழந்தைக்கு வாயுமில்லை. வழியுமில்லை" என்று குறிப்பிட்டார்கள்.

"நம்மை நாமே பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டுமானால் நம்முடைய குழந்தைப் பருவத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால் நம்முடைய தூய்மையான ஆன்மாவைத் தரிசிக்க அது ஒன்று தான் வாய்ப்பு".

இவ்வாறு பேராசிரியர் அவர்கள் பேசி முடிதத பிறகு, திரு. மாறன் அவர்கள் தாம் கேட்டு உவந்த கருத்துக்கள் சிலவற்றைத் தொகுத்து உரைத்தார்கள். பின்னர் சங்கத் தலைவர் திரு. ரெட்டியார் அவர்கள் நன்றி தெரிவிக்கக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.


"எழுத்தாளன்"
(மாத இதழ்)
ஆண்டுமலர் உள்பட
வருட சந்தா ரூ 3—00
தனிப்பிரதி 25 பைசா
சிறப்பு மலர் தனி.
விபரங்களுக்கு: நிர்வாகி,
"எழுத்தாளன்"
24, தேரடிக்கடைத் தெரு,
திருச்சி-2.

# நம் கடமை

[ராதிகா]

★

நம் நாட்டவர்களின் நான்குவேதங்களில் ஒன்றாகிய ரிக் வேதத்தின் பெரும்பாகம் ஈச்வரப் பிரார்த்தனையே யாகும். அப்பாட்டுகளினால் சுரங்கள் ஜனித்து அவற்றால் சங்கீதம் உண்டாகியது. மானிடப் பிறவி யெடுத்த ஒவ்வொருவரும் எத்தனைதான் கற்றுணர்ந்திருப்பினும் தமக்கு வேண்டிய இகபரசாதனங்களை முற்றும் பெற்றுய்வது அபூர்வம்; ஆகவே சர்வசக்தியும், சர்வஞானமும் சர்வகாருண்யமும் உடைய பகவானை, தமக்குள் உண்டாகும் பயங்கரமான ஆசாபாசங்களை விட்டொழிக்கவும் சத்கருமங்களை அனுஷ்டிக்கவும் வேண்டிய புத்தியையும் சக்தியையும் கொடுக்கும்படி உண்மையான பணிவுகலந்த பக்தியுடன் பிரார்த்திக்க வேண்டும். மானிடர் செய்த பாவங்களுக்காக அவற்றிற்கு அநுதாபப்பட்டும், தாம் செய்யும் சத்காரியங்களுக்குப் போதுமான சக்தியற்றிருந்தால், அச்சக்தியை அருளும்படியும் தம்மிடமுள்ள குற்றங்களை மன்னித்து தமக்குத் துணைபுரியும்படியும் வேண்டிக் கொள்வது பிரார்த்தனையாகும்.

நமக்குச் சம்பவிக்கும் கஷ்டநிஷ்டூரங்களை நமது ஆப்தர்களிடம் சொல்லி முறையிடுவதில் துக்க சாந்தியும் மனநிறைவும் ஏற்படுகிறதல்லவா? அதே போல, பெற்ற அன்னை போன்று பேணி வளர்த்து குற்றங்குறை பொறுத்து குணவமுதூட்டி வற்றிடாத அன்புகொண்டு ஆதரிப்பதைக் கடமையாகக் கொண்ட கடவுளிடம் நாம் ஒவ்வொரு நிமிஷமும் செய்யும் பிரார்த்தனையால் மனச்சந்தோஷமும் தைரியமும் ஈச்வர பக்தியும் தினே தினே அதிகமாகி பரிசுத்தராக்கி பாவ காரியங்களை விட்டொழிக்க அநுகூலமாகுமல்லவா? சத்தியம், சாந்தம். சுவாமிபக்தி முதலான குணச்சிறப்புகளைப் பெற்றிருக்கும் ஒரு உத்தமரின் முன்பு ஒரு துஷ்டன் அடிக்கடி போய் நின்றால் அத்துஷ்டனுக்கு அந்த உத்தமருடைய பரிசுத்த நடவடிக்கைகளைக் காணுந்தோறும் அத்துஷ்டனுக்குப் பயமுண்டாகி தனது துஷ்ட எண்ணங்களும் கருமங்களும் மாற்றம் பெற்றுக்கொண்டே வர அவ்வுத்தமர் மீது பிரியமும் மரியாதையும் ஏற்படுவது சகஜம். அதேபோல பாவ தாபங்களால் பிடியுண்டவர் அப்பாவ தாபங்களைப் போக்கவல்ல ஆண்டவனிடம் அடிக்கடி மனப்பூர்வமாய் பிரார்த்தனைகளைச் செய்து தமது ஆத்மாவை அப்பரமாத்மாவிடம் தத்தம் செய்யுந்தோறும் அந்த ஆத்மா பரமேஸ்வரனுடைய ஞானநேத்ரத்திற்கு முன்பாக நேர்நேராக நின்று முறையிடுகையில், அப்பாவ தாபங்கள் போவதுடன் இனி அப்படிப்பட்ட பாவங்களைச் செய்ய பயத்தை உண்டாக்குமல்லவா? மேலும் இறைவனை நாடி நித்தியபிரார்த்தனை செய்யாதவனைப் பார்க்கிலும் நித்தியப்பிரார்த்தனை செய்பவன் காமக்குரோதாதி வலைகளில் சிக்காமல் எச்சரிக்கையாய் இருக்கக்கூடும்.

உலகமெய்ப்புக்காக சிலர் கண்களை மூடிக்கொண்டு, கைகள் எட்டும்வரை தூக்கியபடி, வெளியார் கண்டுமதிக்க பாடியாடிப் பிரார்த்தனை செய்வதோ துளசிமாலை, நாமம் தரித்தோ, விபூதி ருத்ராக்ஷம் முதலியவை தரித்துக் கொண்டு பழம் தேங்காய் தூப தீபங்களை விக்கிரகங்களுக்குக் காட்டுவது மட்டுமோ உண்மையான பிரார்த்தனையல்ல. கடவுளிடம் மனம் ஒன்றி அந்தரங்கமாக தன் தவறுகளை மனம் விட்டு இரகசியமாய் கூறி மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டு தமக்கு வேண்டிய வரங்களை அளித்து என்றும் தங்களுக்குத் துணையிருந்து நல்வழி நடத்தி ஆண்டருள வேண்டும் என்று நம்பிக்கையுடன் ஆத்மார்த்தமாக பிரார்த்திப்பதே சிறந்த உயர்ந்த உண்மையான பிரார்த்தனையாகும். உதாரணமாக திரௌபதி மானஸம்ரக்ஷணம் கதைபற்றி எல்லோருக்கும் தெரியுமாதலால் அதைப்போல மற்றொரு கதையை நிகழ்ச்சியைப்பற்றி கூற விரும்புகிறேன்.

ஒரு பக்திமான் தன்னை மறந்து ஆண்டவன் லீலாவிநோதங்களில் மனம்லயித்தபடி காவிரிக்கரையில் வண்ணான் விரித்திருந்த துணியைக் கூட கவனியாமல் அதன் மேல் நடந்து சென்றுகொண்டிருந்தார். வண்ணானே அவரைக் கண்டபடி பேசினான். அவரோ ஒன்றும் கூறாமல் அங்கேயே அமர்ந்து நாராயண நாமத்தில் மூழ்கினார். அது சமயம் வைகுண்டலோகத்தில் லக்ஷ்மிதேவியுடன் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்த விஷ்ணு எழுந்து விரைந்து எங்கோ புறப்பட்டார். தேவி யாதொன்றும் புரியாமல் பதியை பின்தொடர நினைக்கையில் மீண்டும் பகவான் உட்கார்ந்துவிட்டார். மாயவனை வினாக்குறி தோன்ற தேவி பார்த்தாள்.

புன்னகைத்த பகவான் "புரியவில்லையா தேவி! கதியில்லை வேறே என்று என்னையே துதிக்கும் பக்தன் ஒருவன் தன்னை மறந்த நிலையில், மற்றவரின் ஏசலுக்கு உள்ளாக நேர்ந்ததே என்று அவனைக்காக்க துணைபுரியப் போனேன். அவனே தன்னைக் காத்துக்கொள்ள, தன் வலுவை மதிப்பை வெளிக்காட்டிக் கொள்ள தனக்கு சக்தியிருக்கிறது என்ற எண்ணத்துடன் தன்னை ஏசியவரை எதிர்த்தான். அவனை அடிக்கவே ஆரம்பித்துவிட்டான். எனவே என் துணை தேவையில்லை எனத் திரும்பி விட்டேன்" என்றார் இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால் தனது மானாபிமானத்தை மறந்து அபயம் வேண்டினால், தஞ்சம் என்று நம்பியவரை அஞ்சேல் என அபயமளித்து ஆதரிக்க ஆண்டவன் தயாராகக் காத்திருக்கிறான் என்பதே.

பிரார்த்தனைக்கு காலம் இடம் முதலானது அனாவசியம். எங்கு எப்போது மனம் தூய்மையடைந்து இறைவனை அணுகி துதிக்கிறதோ அதுவே சரியான நேரம்; சரியான இடம். என்றாலும் மனம் நிலைப்பட வழக்கமேற்படுவதற்காக, பிரதி தினமும் அருணோதயத்திற்கு முன் எழுந்தும் சுத்தமாக ஸ்நானம் செய்து சுத்த உடைதரித்து சுத்தமான இடத்திலிருந்து மனதைப் பொறிபுலன்களின் வழியே போக விடாமல் நிலை நிறுத்தியும், தமக்குள் அந்தர்யாமியாக இருக்கும் ஈசனை தியானித்தும் தாம் எண்ணுபவைகளும், புரியும் தொழில்களும் பரிசுத்தமானவைகளாக இருக்கும்படி பிரார்த்தித்தும் பிறகு வேலைகளைத் தொடங்கிடுதல் முக்ய கடமையாகும்.

ஈச்வர உபாசனையைச் சார்ந்த ஓரங்கமாகிய பிரார்த்தனையைப்போல் ஸ்தோத்திரம், தியானம், வந்தனம் என்பவைகளும் வெவ்வேறு அங்கங்களாகும்.

வந்தனமானது நமது உடலையும் உயிரையும் சம்ரக்ஷணை செய்யும். அவரது அளவற்ற கருணையைக் கருதி நமக்குள்ள நன்றியறிவைத் தெரிவிப்பதே வந்தனமாகும். தியானமாவது ஈசனுடைய ஸர்வ வியாபகத்துவம், ஸர்வஞ்ஞத்துவம், ஸர்வகாருண்யத்வம், ஸர்வநிர்மலத்துவம் என்பவற்றைச் சிந்தித்து, அவரது அதிஸமீப ஸாந்நித்யத்தை மனக்கண்ணால் காண முயல்வதே தியானமாகும்.

கடைசி பக்கம் பார்க்க

# BENEDICTION

*(Extracts from Kahlil Gibran)*

★

## LOVE

When love beckons to you follow him,
Though his ways are hard and steep.

★

And when he speaks to you believe in him,
Though his voice may shatter your dreams as the north wind lays waste the garden.

★

Like sheaves of corn he gathers you unto himself.
He threshes you to make you naked.
He sifts you to free you from your husks.
He grinds you to whiteness.
He kneads you until you are pliant;
And then he assigns you to his sacred fire, that you may become sacred bread for God's sacred feast.

★

Loves gives naught but itself and takes naught but from itself.
Love possesses not nor would it be possessed;
For love is sufficient unto love.

★

Love has no other desire but to fulfil itself.

★

## MARRIAGE

You were born together, and together you shall be for ever more.
But let there be spaces in your togetherness.

★

Love one another, but make not a bond of love;
Let it be rather a moving sea between the shores of your souls.

★

Sing and dance together and be joyous, but let each one of you be alone,
Even as the strings of a lute are alone though they quiver with the same music.

★

Give your hearts, but not into each other's keeping.

★

And stand together yet not too near together;
For the pillars of the temple stand apart,
And the oak tree and the cypress grow not in each other's shadow.

★

## CHILDREN

Your children are not your children.
They are the sons and daughters of Life's longing for itself.
They come through you and not from you,
And though they are with you they belong not to you.

★

You may give them your love but not your thoughts,
For they have their own thoughts.
You may house their bodies but not their souls,
For their souls dwell in the house of tomorrow, which you cannot visit, not even in your dreams.
You may strive to be like them, but seek not to make them like you.
For life goes not backward nor tarries with yesterday.

★

## GIVING

You give but little when you give of your possessions.
It is when you give of yourself that you truly give.

★

And there are those who have little and give it all.
They are the believers in life and the bounty of life, and their coffer is never empty.
And there are those who give and know not pain in giving, nor do they seek joy, nor give with mindfulness of virtue;
They give as in yonder valley the myrtle breathes its fragrance into space.
Through the hands of such as these God speaks, and from behind their eyes he smiles upon the earth.

★

It is well to give when asked, but it is better to give unasked, through understanding.

★

All you have shall some day be given;
Therefore give now, that the season of giving may be yours and not your inheritors'.

See on last page

# ப்ரத்யக்ஷதர்சனம்

நா. சேதுராம்

★

பரிபூர்ணமாயுள்ள பிரம்மம் எல்லாம் வல்ல இறைவனே. இறைவனை ப்ரத்யக்ஷமாக காணவே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பல ரிஷிகள் வேத காலத்திலிருந்து, உடல் வருத்தியும் மனதை நிலைநிறுத்தியும், உள்ளொளி பெருக்கியும் முயன்று வருகிறார்கள். மனவலிமை, தேக வலிமை கொண்ட யோகிகள் தவிர, வேறு பல சாதாரண மனிதர்களும் இறைவனை காணவேண்டி முயன்று வெற்றியும் கண்டுள்ளனர். இவர்கள் கடைப்பிடித்த வழிதான் காருண்யமும், பக்தியும். நம் வாழ்நாட்களிலேயே நாம் சில பெரியோர்களைக் காண்கிறோம். ராமகிருஷ்ண பரமஹம்சர், ரமண மகரிஷி, அரவிந்த ரிஷி, அப்பைய்ய தீக்ஷிதர், சதாசிவ ப்ரம்மேந்திராள், நாராயண நம்பூத்ரி, தியாகைய்யர் போன்றவர்கள்; சங்கராசாரியார், ராமாநுஜர், வியாசராயர் போன்றவர்கள்; ராமதாஸர், துளசிதாஸர், பட்டினத்து அடிகள்; அருணகிரியார், ஆழ்வார்கள், நாயன்மார்கள் புரந்தரதாஸர் போன்றவர்கள் என்று பலரையும் வரலாறு நமக்கு அறிமுகப்படுத்துகிறது.

இவர்கள் பல ஜீவராசிகளிடத்து காருண்யம் கொண்டு, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்னும் தத்துவத்தில் வாழ்ந்தவர்கள். அபார பக்தி காரணமாக பிறர் பித்தன் என்று நினைக்கும்வகையில் பக்தி பித்து கொண்டவர்கள் அவர்கள். துறவுபூண்டவர்கள் சிலர் துறவுபூணாது வாழ்வு உய்யப் பெற்றவர் பலர்.

ப்ரத்யக்ஷமாக கடவுளைக்காண விதிகளோ தடைகளோ கிடையாது. உன்னதமான தன்மை எங்குண்டோ அங்கே கடவுளைக் கண்டார்கள்.

தில்லையின் எல்லையை மிதித்தாலே கடவுளிடம் ஐக்கியம் ஆனதாகக்கண்டார் நந்தனார். கைலாய மலையின்மேல் கால்பதித்து நடப்பது அபசாரம் என்று கைகளை ஊன்றியே கயிலையில் சிவசந்நிதியை அடைந்து ஸாயுஜ்ய பதவியடைந்தார் காரைக்கால் அம்மையார்.

திருப்பதித் திருமலையில் உள்ள பக்தர்கள் கைகால்கள் கழுவும் புஷ்கரணியில் ஒரு மீனாகப் பிறந்தாலே, வேங்கடநாதனின் பக்தர்களின் பாததூளி பட்டு நான் வைகுந்தம் செல்வேன் என்று ஆழ்வார் மனமுருகி பாடுகிறார்.

பக்தனின் மனநிலைக்கொப்ப உன்னதமான பொருள்களையும் உன்னத குணமுடையோர்களையும் ஈஸ்வர அம்சமாகக்கொண்டு, ஈஸ்வரனை நேரிட அந்தந்த ரூபங்களில் பொருத்தி காண்பதுதான் ப்ரத்யக்ஷ தர்சனமாகும். தெய்வ சாந்நித்யம். பெற்ற நடமாடும் மனித தெய்வங்களாம் நம் குருமார்கள் பலரின் முன்னிலையில் நிற்கும் போது, மணிவாசகர் மெய்ம்மயிர் படிப்ப, கண்கள் நீர்வார்க்க, கை கூப்ப, விம்மி நின்ற நிலையையே நாம் அனுபவிக்கிறோம். அவ்வமயம் உண்மையிலேயே தெய்வ தர்சனம் பெறுகிறோம். அது போலவே மாதா, பிதா, குரு இவர்களையும் தெய்வமாகக் கொள்ள வேண்டும். அப்படியாகில் தெய்வம் அவர்கள் ரூபத்தில் நம்மிடமே சுற்றிச் சுற்றிவரும். வேத ரிஷிகள் காலத்திலிருந்து கடவுளை ப்ரத்யக்ஷமாகக் காண்பதையே குறிக்கோளாகக் கொண்டு பல வகையிலும் தத்துவார்த்தங்களையும் யோக முறைகளையும் விளக்கமாகச் சொல்லுகிறார்கள் பல உபநிஷதங்களிலும் பலவகையில் விளக்கி கடைசியில் கடவுட் தத்துவத்தில் முடித்து நமக்கும் தர்சனம் கிடைக்க வழி வகுக்கிறார்கள்.

“தேஜோயத்தேரூபம் கல்யாணதமம் தத்தே பஸ்யாமி” கடவுளே! உன்னுடைய உத்தமமான மங்கள வடிவம் எதுவோ அதை நான் பார்க்கும்படி அருள்வாய் என்று கெஞ்சுகிறார் ஒருவர். உடனே இந்த சூரிய மண்டலத்தின் நடுவில் உள்ள புருஷன் எவனோ அவனே நான் என்று “யோஅஸாவஸௌ புருஷ: ஸோஅஹமஸ்மி” என்று கூறுகிறார் அவர். கடவுளுடன் தன்னையும் ஒன்றிப்பார்க்கிறார் அவர். இது ஐக்கிய தத்துவம்.

மேலும் திருமங்கை யாழ்வார் கடவுளின் திருவுருவத்தை பச்சைமா மலையிலும், நீரிலும், நிலாத் துண்டத்திலும மேலும் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளிலும் கண்டார். பிரஹலாதன் தூணிலும் உளன், துரும்பிலும் உளன் என்று நிரூபிக்க வில்லையா?

காக்கைச் சிறகினிலும் கருமேகத்திலும் கிருஷ்ணனைக் கண்டார் பாரதியார். குந்திதேவியோ கிருஷ்ணனை “ஸர்வபூதானும் அந்தா பஹிர் அவஸ்திதம்” என்று எல்லா பிராணிகளிடத்தும் உள்ளும் புறமும் இருக்கிறவராகக் காண்கிறார். சங்கசகர கதாபாணியாய் திரௌபதை கிருஷ்ணனை தியானித்து தன் ஜன்மசாபல்ய மடைந்தது யாவருமறிந்ததே.

குருவாயூரப்பனை நேரில்கண்ட நாராயண நம்பூதிரி “திவ்யகைஸோர வேஷம்” திவ்யமான காந்தியுடைய இளமையான வேஷத்தை தான் பார்த்து நாமும் அதை அனுபவிக்க பலவிதமான வர்ணனைகளினால் தான் ஆனந்தப்படுகிறார்.

ஸ்ரீ கிருஷ்ணனை பலவிதமாக ஆசான் முதல் தோழன், வேலைக்காரன்வரை தன் மனதில் ரூபம் கொண்டு அவனுடன் ராஸலீலையே ஆடிய மஹாகவி பாரதியாரின் உருக்கமான குரல் நம்மையே உலுக்கிவிடுகிறது.

இது போலவே சைவ சமயக்குரவர்கள் பல வகையிலும் நேரில் மஹேஸ்வரனை தாங்கள தரிசித்து நம்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். அகஸ்தியர் தருக்குற்றால நாயகனைக் கண்டமுறையும நாயன்மார்கள் எல்லோரும் சொக்கநாத பெருமானைக் கண்டு சிவலீலா புரிந்த முறையும் அவர்கள் இறைவன்பால் கொண்ட பேரன்பே காரணம். தாயின் அன்பு, தகப்பனின் விவேகம், குருவின அறிவு, யோகியின் பக்குவம்,

(கடைசி பக்கம் பார்க்க)



சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தின் மூலம் சேமிக்கிறேன்

நான சேமிக்க விரும்பும் தொகையை, என் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்ளும்படி என் முதலாளிக்கு நான் எழுதிக் கொடுத்து விட்டேன். அவ்வளவுதான். மற்ற விவரங்களை முதலாளி கவனித்துக் கொள்வார்.

இந்த வசதி அலுவலகங்களில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் கிடைக்கிறது.

திட்டம் பற்றிய முழு விவரங்களை உங்கள் அருகாமையிலுள்ள தபால் நிலையத்திலிருந்து நீங்கள் கேட்டறியலாம்.

ஏனெனில் அது மிகச் சுலபமான திட்டம்

தேசிய சேமிப்பு நிறுவனம்

davp 67/393

Continuation from page 9

## WORK

You work that you may keep pace with the earth and the soul of the earth.

For to be idle is to become a stranger unto the seasons, and to step out of life's procession that marches in majesty and proud submission towards the infinite.

★

When you work you are a flute through whose heart the whispering of the hours turn to music.

★

Always you have been told that work is a curse and labour a misfortune.

But I say to you that when you work you fulfil a part of earth's furthest dream, assigned to you when that dream was born.

★

WORK IS LOVE MADE VISIBLE.

## RELIGION

Is not religion all deeds and all reflection,

And that which is neither deed nor reflection, but a wonder and a surprise ever springing in the soul, even while the hands hew the stone or tend the loom?

Who can separate his faith from his actions, or his belief from his occupations?

Who can spread his hours before him, saying, "This for God and this for myself; This for my soul and this other for my body"?

★

He who wears his morality but as his best garment were better naked.

And he to whom worshipping is a window, to open but also to shut, has not yet visited the house of his soul whose windows are from dawn to dawn.

★

Your daily life is your temple and your religion.

— G. V. Pillai

## 8-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஸ்தோத்திரமானது கடவுளது குறைவற்ற காருண்யத்தையும் நித்திய லக்ஷணங்களையும் நமது பக்தி சிரத்தைகளை வெளியிடுவதாகும். ஸ்தோத்திரம் செய்வதால் இறைவனுக்கு பிரயோஜனமில்லை. என்றாலும் சாதாரணமாக பறவைகட்கு நாம் இறைபோட்டால் கூட அவை அடிக்கடி வந்து இறகுகளாலும் முகத்தாலும் நன்றியை தெரிவிப்பதுபோல, நாய்க்கு ஏதாவது போட்டால் வாலையாட்டி நன்றி தெரிவிக்கும். கேவலம் பகுத்தறிவற்ற அப்பிராணிகளே நன்றி மறவாமல் இருக்கும்போது நாம் பிரபஞ்சத்தில் பிறந்ததிலிருந்து சாகுமளவு சம்ரக்ஷணை செய்யும் ஆண்டவனிடம் நன்றி காட்டவேண்டியது மிக முக்ய கடமையில்லையா? எனவே பக்திக்குரிய பலவித உணர்ச்சிகள் எழுச்சியுற்று திருப்தியடையும்படியாக தியானம், வந்தனம், ஸ்தோத்திரம், பிரார்த்தனை முதலானவைகள் ஈஸ்வர உபாசனையில் நிறைந்திருத்தல் வேண்டும்.

இவ்வுபாசனையின் நோக்கம் நமதுள்ளத்தில் ஆழ்ந்த கடவுள் பக்தியும் நிஷ்கபடமான நன்றியறிவும் பூரணமாய் வியாபித்து ஈச்வர ஸாந்நித்யத்தை உணரவேண்டுமென்னும் ஆசை நிறைவேறி பாபபந்த நிவாரணேச்சை பரிபூர்த்தியாயின் முடிவு பெற்றதாகும். எதிர்பாராத நன்மை ஏற்படின் நன்றியறிவு அதிகப்படும். துக்கமும் துன்பமும் அதிகப்படுங்கால் பிரார்த்தனை அதிகப்படும். இவ்வித சமயோசித உணர்ச்சி ஏற்படுவது இயற்கை. அதைத் தடுப்பது தவறாகும் என்பதை உணர்ந்து மக்கள் தம் கடமையைச் செவ்வனே செய்வதில் முனைவார்களாக.

————

## 10-ம் பக்கம் தெடர்ச்சி

மனையின் பக்தி, கணவனின் கருணை, குழந்தைகளின் தூய்மை யாவும் ஒருங்கே நாம் அனுபவிக்க வேண்டிய திருமுறைகளும், பெரும் புராணங்களும் ஏற்பட்டுள்ளன. சம்பந்தப் பெருமான் கண்ட தோடுடைய செவியனும், விடையேறியவனும், சுந்தரர்கண்ட பித்தனும், பிறைசூடியவனும், அப்பரடிகள் கண்ட குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாய் புன்சிரிப்பும், மணிவாசகப் பிரான் கண்ட ஆதியுமந்தமுமிலா வரும் பெருஞ் சோதியையும், முன்னைப் பழம் பொருட்டு முன்னைப் பழம்பொருளையும், தாயுமான அடிகள் போற்றிய ''அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய் உள்ளதையும், இராமலிங்க அடிகளார் போற்றிய சுழியாதவருட் கருணைப்பெருக்கையும், என்றும் தூண்டாத மணிவிளக்கின் சோதியையும் நம் மனதில் திருப்பத் திரும்ப நினைந்து, பரிபக்குவத்திற்கு வழிகோலவேண்டும்.

## நாயும்—நண்பர்களும்

நாய்க்கு அநேக நண்பர்கள் இருப்பதின் காரணம் அறிவீரோ? அது நண்பர்களிடம் நாவை ஆட்டாமல் வாலை ஆட்டுவது தான்.

———

## எடை போடுகிறார்கள்

புளி, சர்க்கரைபோன்ற சாமான்களை மளிகைக் கடைக்காரன் நிறுக்கிறான். தட்டான் தங்கம், வெள்ளியை நிறுக்கிறான். ஜட்கா வண்டிக்காரன் முன்னால் வா, பின்னால் போ என்று ஆளையே நிறுத்துப் பார்க்கிறான்.

—ரெட்டியார்

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2.